**TAMILNADU CORPORATION FOR DEVELOPMENT OF WOMEN LTD.,**
(A GOVERNMENT OF TAMILNADU UNDERTAKING)
Annai Teresa Mahalir Valagam, 1st Floor, Valluvarkottam High Road,
Nungambakkam, Chennai - 600 034.

# தமிழ்நாடு மாநில ஊரக வாழ்வாதார இயக்கத்தின் தலைமை செயல் அலுவலர் (கூ. பொ), முன்னிலை: திருமதி. ஷ்ரேயா P சிங், இ. ஆ. ப., அவர்களின் செயல்முறைகள் ஆணை

**செயல்முறை ஆணை எண். 118/ 2024/ த . மா . ஊ. வா . இ    நாள்: 04-06-2024**

| | |
|---|---|
| பொருள் | த.மா.ஊ.வா. இ- தேசிய ஊரக வாழ்வாதார இயக்கம் – தென்னை நாற்றுப்பண்ணை அமைக்கும் திட்டம் செயல்படுத்துதல் – தொடர்பாக |
| பார்வை | 1. தே. ஊ. வா. இ. – ஆண்டு செயல் திட்டம் 2024-25 – அனுமதி வழங்கப்பட்ட செயல் திட்டங்கள்<br>2. 20.02.2024 அன்று வேளாண்மை நிதிநிலை அறிக்கையில் வெளியிடப்பட்ட அறிவிப்பு. |

*****

**ஆணை**

20.02.2024 அன்று மாண்புமிகு வேளாண் மற்றும் உழவர் நலத்துறை அமைச்சர் அவர்கள் தமிழ்நாடு சட்டப் பேரவையில் அறிவிப்பு எண் 77 (ii) ல் ஊரக வளர்ச்சி எனும் துறையின் கீழ், பண்ணை மகளிர் சுய உதவிக்குழுக்கள் எனும் தலைப்பில் வெளியிட்ட அறிவிப்பு – தென்னை நாற்றுப்பண்ணை அமைத்தல் தொடர்பாக.

**அறிவிப்பு:**

விதைப்பு முதல் வேளாண்மை தொடர்பான அனைத்துப் பணிகளிலும் மகளிரின் பங்கு மிகமுக்கியமாகும். எனவே, 2024 2025-ஆம் ஆண்டில், ஆர்வமுள்ள, பயிற்சி பெற்ற மகளிர் சுய உதவிக் குழுக்களைக் கொண்டு, தோட்டக்கலைத்துறையின் ஒருங்கிணைப்பின் மூலம், 2 கோடியே 40 இலட்சம் ரூபாய் மதிப்பீட்டில் 60 தென்னை நாற்றுப்பண்ணைகள் அமைக்கப்படும். தென்னங்கன்றுகள் தோட்டக்கலைத் துறையினால் கொள்முதல் செய்யப்பட்டு, அரசுத் திட்டங்களின் கீழ் விநியோகிக்கப்படும்.

**முன்னுரை**

தென்னை மரம் 80 ஆண்டுகளுக்கு மேல் பலன் தரும் ஒரு பணப்பயிராகும். மரம் நட்ட 8 ஆண்டுகளிலிருந்து பலனுக்கு வந்து, பின்னர் சில வருடங்களில் தொடர்ந்து நல்ல மகசூலை பெறலாம். நடுவதற்காக தேர்வு செய்திடும் தென்னங்கன்றின் தரம் நன்றாக இருந்தால் விவசாயிக்கு பணமும், காலமும் விரையம் ஆகாது.

தென்னையானது நாற்று விதை மூலம் உற்பத்தி செய்யப்படுகிறது. தென்னை மரம் அயல்மகரந்த சேர்க்கைமூலம் இனவிருத்தி செய்யப்படுகிறது . இதனால் மரங்களில் காய்ப்புத்திறன் மாறுபடும். எனவே இதனை கருத்தில் கொண்டு நல்ல தாய் மரங்களிலிருந்து விதை நெற்றுக்களை தேர்வு செய்து

தரமான தென்னங்கன்றுகளை உற்பத்தி செய்வது விற்பனை செய்வது நல்ல இலாபகரமான தொழிலாக கருதப்படுகிறது. எனவே, தென்னங்கன்றுகள் உற்பத்தி தொடர்பாக சென்ற ஆண்டில் தோட்டக்கலைத் துறை மூலம் பராமரிக்கப்படும் மாநில தென்னை நாற்றுப் பண்ணைகளில் மகளிர் சுயஉதவிக்குழுக்களுக்கு பயிற்சி அளிக்கப்பட்டது.

தொடர்ந்து, 2024-25 ஆம் ஆண்டில் பயிற்சியளிக்கப்பட்ட மகளிர் சுயஉதவிக்குழுக்கள் தென்னங்கன்றுகள் உற்பத்தி துவங்கும் வகையில், மாண்புமிகு விளையாட்டு மற்றும் இளைஞர் நலத்துறை அமைச்சர் அவர்கள் சட்டமன்றப் பேரவையில் 60 மகளிர் சுயஉதவிக்குழுக்களுக்கு தலா ரூ.4 இலட்சம் சுழல்நிதியாக வழங்கப்படும் என்று அறிவித்தார்கள்.

**மகளிர் சுயஉதவிக்குழுக்கள் மூலம் தென்னை நாற்று உற்பத்தி மேற்கொள்ளும் திட்டத்திற்கான குறிக்கோள்கள்**

1. மகளிர் சுயஉதவிக் குழுக்கள் தென்னை நாற்றுக்கள் உற்பத்தி மேற்கொண்டு, அதன் மூலம் வாழ்வாதாரத்தினை மேம்படுத்துதல்,
2. கிராமங்களில் தென்னை விவசாயிகளுக்குத் தேவையான தரமான தென்னை நாற்றுக்களை அந்தந்த கிராம சுய உதவிக்குழுக்களே உற்பத்தி செய்து விநியோகம் செய்வதை ஊக்குவித்தல்.
3. மகளிர் சுயஉதவிக்குழுக்கள் தரமான தென்னை உற்பத்தி தொடர்பான நவீனத் தொழில்நுட்பத்தை நன்கு தெரிந்து கொண்டு, அவர்களை தொழில்நுட்ப ரீதியாக வலுப்படுத்துதல்.

**தென்னங்கன்று உற்பத்தியில் மேற்கொள்ள வேண்டிய முக்கிய பணிகள்**

1. **தென்னந்தோப்புகளை தேர்வு செய்தல்**

தென்னை சாகுபடி அதிகம் மேற்கொள்ளப்படும் பகுதிகளில் உள்ள அனைத்து தோப்புகளும் விதை நெற்றுகள் தேர்வு செய்ய ஏற்றதல்ல. தொடர்ந்து நல்ல விளைச்சல் தரக்கூடிய, பூச்சி, நோய் தாக்காத தென்னந் தோப்புகளையே தேர்வு செய்ய வேண்டும். இந்த தோப்புகளில் மிதமான நீர் பாசனம், உரமிடும் முறை கடைபிடித்திருக்க வேண்டும்.

2. **தாய் மரங்களை தேர்வு செய்தல்**

- நெட்டை ரகம் மட்டுமே தேர்வு செய்து தென்னை நாற்றுகள் உற்பத்தி செய்ய வேண்டும். நெட்டை x குட்டை அல்லது குட்டை x நெட்டை கலப்பு தென்னை மரங்களில் இருந்து எடுக்கப்படும் காய்களை உபயோகிக்கக் கூடாது. அரசு அங்கீகாரம் பெற்ற தென்னை நெற்றுக்கள் உற்பத்தியாளர்களிடம் இருந்து மட்டுமே தென்னை நெற்றுக்களை கொள்முதல் செய்ய வேண்டும். 35 – 40 வயது உள்ள தென்னை மரங்களின் காய்களை தேர்வு செய்து கொள்முதல் செய்ய வேண்டும்.
- சீராக காய்க்கும் குணங்களுடன், வருடத்திற்கு 100 காய்களுக்கு குறையாமல் காய்க்கும் மரங்களாக இருக்க வேண்டும். நெற்றுக்களில் பருப்பு கணிசமாக

இருக்க வேண்டும். மரத்தின் வருடாந்திர காய்ப்புத் திறன் சிறு வயதிலிருந்து வயதான மரமாக வளரும் வரை கணக்கெடுத்து சராசரி காய்ப்பு நிர்ணயம் செய்ய வேண்டும்.

- நல்ல விளைச்சல் தரும் மரங்களில் உச்சிக்குருத்தில் 30-40 இலைகள் கொண்டதாகவும் குடை போன்ற வடிவில் இருத்தல் வேண்டும். இலை, காம்பு வலுவானதாகவும் அகலமானதாகவும் தண்டில் இணைந்திருக்க வேண்டும். நல்ல வலுவான காம்புகள் கொண்ட தென்னங்கீற்றுக்கள் நெற்று கொத்துக்களை தாங்கி உதிர விடாமல் பாதுகாக்கும்.
- ஒவ்வொரு இலைக் காம்புப் பகுதிகளிலிருந்தும் ஒரு பூங்கொத்து வெளி வர வேண்டும். இதில் 2-3 பெண் பூக்கள் இருக்க வேண்டும். ஒரு மரத்தில் குறைந்தது 12 குலைகள் இருக்க வேண்டும். குலையின் காம்பு தடித்து குட்டையாக இருக்க வேண்டும்.
- விதை நெற்றுக்கள் நீளமாக இல்லாமல் உருண்டை வடிவில் இருக்க வேண்டும். இதில் எடுக்கப்படும் தேங்காய் பெரியதாகவும் பருப்பு பெரியதாகவும், கெட்டியாகவும் இருக்க வேண்டும்.
- வீட்டிற்கு அருகாமையிலுள்ள மரங்கள், மாட்டுக் கொட்டிலுக்கு பக்கத்திலுள்ள குப்பைமேடு, கண்மாய்கரையிலுள்ள மரங்கள் அதிக நீர், உரம் பெறுவதால் அதிக விளைச்சல் உடையனவாகத் தென்படும். இம்மரங்களைத் தவிர்க்கவேண்டும்.
- அதிகமாக குறும்பை உதிரும் மரங்களிலிருந்து விதை நெற்றுகள் தேர்வு செய்யக் கூடாது.
- 30 ஆண்டு வயதான மரங்களிலிருந்து நெற்றுக்கள் எடுப்பது சிறந்தது.

3. **விதை நெற்றுக்களை சேகரித்தல்**

- **காலம்**

தென்மேற்கு பருவமழை பெய்யும் இடங்களில் பிப்ரவரி 15 லிருந்தும் மற்ற இடங்களில் மார்ச் 15 லிருந்தும் சேகரிக்க துவங்கி ஜுன் மாதம் முதல் ஜூலை 15 வரை விதை நெற்றுக்களை சேகரிக்கலாம்.

- **தரம்பார்த்தல்**
  - நெற்றுக்களை குலுக்கினால் நீர் ஆடுகின்ற சத்தம் கேட்க வேண்டும்.
  - நன்கு முற்றிய நெற்றுக்கள் எடை குறைந்து இலேசாக இருக்கும்.
  - ஒரு நெற்றின் முனையை சீவிப்பார்த்தால் செங்கல் நிறத்தில் கெட்டியான மட்டை தென்படுவதே சிறந்தது.

- **அறுவடை செய்யும் முறை**

முற்றிய கொத்துக்களை குலையோடு வெட்டி பாதுகாப்பாக கீழே இறக்க வேண்டும்.

- **விதை நெற்றுக்கள் தேர்வு**

ஒரு குலையிலுள்ள எல்லா நெற்றுக்களையும் தென்னங்கன்றுகள் உற்பத்திக்காக பயன்படுத்தாமல், நடுத்தர அல்லது பெரிய அளவான நெற்றுக்கள், உருண்டை வடிவ நெற்றுக்களை மட்டுமே தேர்வு செய்யவேண்டும். இவ்வாறு, அனைத்து மரங்களிலும் இது போன்ற பெரிய காய்களை மட்டும் தேர்வு செய்திட வேண்டும்.

**விதை நெற்றுக்களை பாதுகாத்தல்**

விதை நெற்றுக்களை நாற்றங்காலில் விதைக்கும் முன்னர் 2 மாதங்கள் நிழலில் வைக்க வேண்டும். இந்நெற்றுக்களில் நீர் முற்றிலும் வற்றிவிட்டால் விதைப்பதற்கு உகந்தது அல்ல.

அறுவடை செய்யப்பட்ட விதை நெற்றுக்கள் முதலில் நிழல் காய்ச்சலில் 15–30 தினங்கள் வைக்க வேண்டும். இது முதல் பதப்படுத்தும் முறை. பின்னர் நெற்றுக்களை காம்புப் பகுதியை கீழ் வைத்து மணல் படுக்கையில் அடுக்க வேண்டும். மணல் 3 அங்குல உயரம் வரை பரப்ப வேண்டும். இந்த நெற்றுக்களை ஒன்றின் மேல் ஒன்றாக 4 அடுக்கு வரை அடுக்கலாம். இதன் அருகில் ஒரு குச்சியில் ஓர் அட்டையில் இரகம், எந்த ஊரிலிருந்து தருவித்தது, தருவித்த விவசாயியின் பெயர், சேகரித்த தேதி, சேமிப்பு தொடங்கிய தேதி, விதை நெற்றுக்களின் எண்ணிக்கை போன்ற விபரங்களை எழுதி வைக்க வேண்டும். (விவர பலகை)

4. **நாற்றாங்கால் தயாரிப்பு**

   i. **இடம் தேர்வு செய்தல்**

- நல்ல வடிகால் வசதி உள்ள மணல் அல்லது மணற் பாங்கான மண்ணாக இருக்க வேண்டும். தேவையான நீர் பாசன வசதி வருடம் முழுவதும் இருக்கும் நிலமாக இருக்க வேண்டும். மணற்பாங்கான மண் இல்லாத இடங்களில் சாதாரண நிலத்து மண்ணுடன் மணல் சேர்த்து நாற்றங்கால் படுக்கை தயார் செய்ய வேண்டும்.

- பயனாளிகள் தேர்வு செய்யப்பட்ட ஊராட்சிக்கு அருகிலுள்ள வட்டார நாற்றங்கால்களை (அனைத்து வசதிகளும் உடையதாக இருத்தல் வேண்டும்) தென்னை நாற்றுகளை உற்பத்தி செய்ய தேர்வு செய்ய வேண்டும். தேர்வு செய்யப்பட்ட ஊராட்சிக்கு அருகில் வட்டார நாற்றங்கால் இல்லை என்றாலோ அல்லது வட்டார நாற்றங்கால் இருந்து அதில் தென்னை நாற்றுகளை உற்பத்தி செய்வதற்கு உரிய அடிப்படை வசதிகள் இல்லை என்றாலோ தேர்வு செய்யப்பட்ட உறுப்பினரின் 50 செனட் நிலத்தை தென்னை நாற்றங்கால் உற்பத்திக்கு பயன்படுத்திக்கொள்ள வேண்டும்.

- திறந்த வெளியில் நாற்றங்கால் தயார் செய்யும்போது, கோடை காலத்தில் நிழல் வசதி ஏற்படுத்த வேண்டும். அல்லது அதிக நிழல் இல்லாத காய்க்கும் தென்னந்தோப்புகளில் நாற்றங்கால் அமைக்கலாம்.
- நாற்றங்கால் படுக்கைகள் நீளமாகவும் குறுகலாகவும் இருக்க வேண்டும். அதற்கு இடையில் நடைபாதை அல்லது வடிகால் வசதிகள் இருக்க வேண்டும். படுக்கைகளின் அகலம் 4 அல்லது 5 வரிசைகள் மட்டுமே இருக்கும் வகையில் அமைத்திட வேண்டும்.
- நாற்றங்கால் மண்ணில் லிண்டேன் என்ற மருந்தை கலந்து விட்டால் கரையான் போன்ற பூச்சிகள் தாக்குதலிலிருந்து விடுபடலாம்.
- ஒரு படுக்கைக்கு 250 விதை நெற்றுக்களை அடுக்க வேண்டும். நீர் பற்றாக்குறையுள்ள இடங்களில் 100-125 நெற்றுக்கள் விதைக்கலாம். விதைத்த பின் ஓர் அட்டையில் நாற்றங்கால் படுக்கை எண், இரகம், இடம், விதை நெற்றுக்கள் எண்ணிக்கை, நடவு செய்த தேதி போன்ற விவரங்களை எழுதி வைக்க வேண்டும்.

**ii. நடவு செய்யும் காலம்**

அந்தந்த மாவட்டத்தில் இயல்பாக பெய்யும் பருவ மழையை பொறுத்து, பருவ மழை தொடரும் முன் நடவு செய்ய வேண்டும். இல்லையெனில் அடிக்கடி நீர் பாசனம் செய்ய வேண்டும். கன்றுகள் எந்த மாதத்தில் நடவு செய்யப்பட வேண்டுமோ அல்லது அதிக அளவில் தேவைப்படுமோ என்பதை முன்கூட்டியே நிர்ணயம் செய்து அதற்கு ஏற்றாற் போல் விதை நெற்றுக்களை நடவு செய்ய வேண்டும்.

**iii. விதை நேர்த்தி**

விதைகளைத் தேர்வு செய்யும்போது, நீர்வற்றிய நெற்றுக்கள், அழுகிய நெற்றுக்களை தவிர்த்து தரமான விதை நெற்றுக்களை 0.1 சதவிகிதம் லிண்டேன் கரைசலில் (65 லிட்டர் நீரில் 1 கிலோ லிண்டேன் கலந்தது) நனைத்து எடுக்க வேண்டும். அல்லது கார்பரில் 50 சதவிகிதத் தூள் கலந்த கரைசலில் நனைத்து நடவு செய்ய வேண்டும்.

**5. நாற்றுக்களைத் தேர்வு செய்தல்**

நல்ல தரமான தென்னை நாற்றுக்களை தென்னை நாற்றங்காலிலிருந்து தேர்வு செய்ய வேண்டும். நல்ல சீதோஷ்ண சூழலில் நெட்டை ரக தென்னை நெற்றுக்கள் இரண்டு மாதத்தில் முளைக்க ஆரம்பிக்கும். 90-95 சதவிகித நெற்றுக்கள் ஐந்து மாதங்களில் முளைத்து விடும்.

நாற்றங்காலிருந்து தரமான கன்றுகளை தேர்வு செய்யும்போது, நாற்றுக்களின் வளர்ச்சி, இலைகள் விரியும்தன்மை, வளர்ச்சியின் வேகம், பூச்சி /

நோய்க்கு பாதிப்பாகாமல் இருத்தல் போன்ற குணங்களை கவனத்தில் வைத்துக் கொள்ள வேண்டும். இந்த நாற்றுக்கள் அதிக வளர்ச்சி வேகம் கொண்டதாகவும், குருத்திலிருந்து விரியும் இலைகள் எண்ணிக்கை அதிகமாகவும், காம்பு தடித்து அகலமாகவும் இருத்தல் வேண்டும். ஆரோக்கியமற்ற, வளர்ச்சி குன்றிய பூச்சி நோய்களினால் பாதிக்கப்பட்ட கன்றுகளைத் தவிர்க்க வேண்டும்.

### 6. நாற்றுக்களை பறித்து விநியோகித்தல்

நாற்றங்காலிலிருந்து கன்றுகளை எடுக்கும்போது, வேர்களை அறுத்துவிடாமல் மெதுவாக பறிக்க வேண்டும். ஒட்டியுள்ள நாற்றுக்களை மெதுவாகப் பிரித்துவிடலாம். நாற்றங்காலிலிருந்து எடுக்கப்பட்ட கன்றுகளை உடனே நடுதல் சிறந்தது. அல்லது நிழலில் நான்கு வாரங்கள் வரை வைத்திருந்தும் நடலாம்.

### 7. தரம் குறைந்த அல்லது கழிக்கப்பட்ட கன்றுகளை அப்புறப்படுத்துதல்

தரமற்ற, சரியான வளர்ச்சியில்லாத கன்றுகளை தவிர்த்து விடவேண்டும். வளர்ச்சி குன்றி ஒதுக்கப்பட்ட கன்றுகளிலிருந்து தேங்காய் பருப்பை பிரித்தெடுத்து பயன்படுத்தலாம். மேலும் தவிர்க்கப்பட்ட கன்றுகளை துண்டுகளாக வெட்டி அப்புறப்படுத்த வேண்டும்.

### பயனாளிகள் தேர்வு

- தமிழ்நாட்டில் அனைத்து மாவட்டங்களிலும் தோட்டக்கலைத் துறையின் கட்டுப்பாட்டில் உள்ள அரசுத் தென்னை நாற்றுப் பண்ணைகளில் மகளிர்க்கு தென்னங்கன்றுகள் உற்பத்தி தொடர்பாக சென்ற 2023-24 ஆம் ஆண்டில் பயிற்சி அளிக்கப்பட்டது. நடப்பாண்டில், மாநில அளவில், மொத்தம் 60 தென்னை நாற்று பண்ணைகள் அமைத்து தென்னங்கன்றுகளை உற்பத்தி செய்து விற்பனை செய்ய மகளிர் திட்டம் மூலம் நடத்தப்பட்ட பயிற்சியில் ஆர்வத்துடன் ஈடுபட்டு, பயிற்சியின்போது, அவர்கள் புரிந்து கொண்ட விதத்தினை நன்கு ஆய்வு செய்து மாவட்டத்திற்கு ஒன்று அல்லது இரண்டு குழுக்களை இலக்கிற்கேற்ப தேர்வு செய்ய வேண்டும்.
- ஒரு குழுவில் 10 – 15 நபர்கள் இருக்க வேண்டும். இவர்களில் 2023-24 ஆம் ஆண்டில் தென்னை நாற்றங்கால் உற்பத்தி பயிற்சி பெற்ற 2-3 மகளிர் விவசாயிகள் கண்டிப்பாக தேர்வு செய்யப்பட வேண்டும். தென்னை சாகுபடியில் ஏற்கெனவே ஈடுபட்டுள்ள மகளிர் விவசாயிகளை மீதமுள்ள உறுப்பினர்களாக தேர்வு செய்ய வேண்டும்..
- தேர்வு செய்யப்படும் உறுப்பினர்களில் யாரேனும் ஒருத்தருக்கு தென்னை நாற்று உற்பத்திற்குத் தேவையான நீர் பாசன வசதி மற்றும் உகந்த மண் தரம் கொண்ட 50 செனட் நிலம் உடையவராக இருத்தல் வேண்டும்.
- ஒவ்வொரு தென்னை நாற்றங்கால் உற்பத்தி குழுவிற்கும் ஒரு தனி வங்கிக் கணக்கு தொடங்கப்பட வேண்டும். அந்த குழுவிலுள்ள உறுப்பினர்களுக்குள் தலைவர், செயலாளர், மற்றும் பொருளாளர் தேர்ந்து எடுக்கப்பட வேண்டும். இந்த வங்கிக் கணக்கு செயலாளர், மற்றும் பொருளாளர் மூலம் பராமரித்து இயக்கப்பட வேண்டும்.

நிதி பயன்பாடு

- ஒவ்வொரு தென்னை நாற்று உற்பத்தி குழுவிக்கும் தமிழ்நாடு மாநில ஊரக வாழ்வாதார இயக்கத்திலிருந்து ரூ.4இலட்சம் சுழல் நிதியாக வழங்கப்படும்.
- இந்த நிதியானது மாவட்ட இயக்க மேலாண்மை அலகிலிருந்து தேர்வு செய்யப்பட்ட ஊராட்சி அளவிலான கூட்டமைப்பிற்கு 'FDM (Fund Disbursement Mode)' மூலம் விடுவிக்கப்பட வேண்டும்.
- ஊராட்சி அளவிலான கூட்டமைப்பில் சுழல்நிதி கிடைக்கப்பெற்ற தேதியிலிருந்து 15 நாட்களுக்குள் தென்னை நாற்று உற்பத்தி குழுவின் வங்கிக்கணக்கிற்கு விடுவிக்கப்பட வேண்டும். ஊராட்சி அளவிலான கூட்டமைப்பிலிருந்து சுழல் நிதி விடுவிக்கப்பட்டதையும், மஞ்சள் தொகுப்பில் சுழல் நிதி வரவு வைக்கப்பட்டதையும், வட்டார இயக்க மேலாளரும், மாவட்ட உதவித் திட்ட அலுவலரும் (வாழ்வாதாரம்) ஆய்விட வேண்டும்.
- ஒவ்வொரு தென்னை நாற்று உற்பத்தி குழுவிக்கும் வழங்கப்படும் ரூ. 4 இலட்சம் நிதியினை பின்வரும் செலவினங்களுக்கு பயன்படுத்தலாம்

**நிதி பயன்பாட்டு மற்றும் வரவு விபரம் (10000) தென்னை நாற்றுகள் உற்பத்தி செய்ய**

| வ. எண் | குறிப்புகள் | தொகை (ரூபாயில்) |
|---|---|---|
| 1 | 50 சென்ட் நிலத்துக்கு குத்தகை தொகை (ஒரு ஆண்டிற்கு) | 18,000 |
| 2 | ஒரு நெற்றுக்கு ரூ. 20/– வீதம், 5000 தென்னை நெற்றுக்கள் வாங்க | 1,00,000 |
| 3 | தென்னை நெற்றுக்களை எடுத்து வர போக்குவரத்து செலவு | 9,000 |
| 4 | ஏற்று / இறக்குக் கூலி | 5,000 |
| 5 | தகவல் மற்றும் பெயர் பலகை | 6,000 |
| 6 | நிழல் காய்ச்சல் ஆள் (2 நபர்கள்) கூலி 60 நாட்களுக்கு ஒரு நபருக்கு ஒரு நாளைக்கு ரூ. 200/– வீதம் | 24,000 |
| 7 | மணல் படுக்கை 3 அடி ஆழம் 15 அடி நீளம் குழி தோண்ட மற்றும் மணல் நிரப்ப | 30,000 |
| 8 | 4 நாட்களுக்கு ஒரு முறை என்று 4 மாதங்களுக்கு நீர் பாய்ச்ச ஆள் கூலி | 7,500 |
| 9 | 4 நாட்களுக்கு ஒரு முறை என்று 6 மாதங்களுக்கு முதன்மை பாத்திகளில் நீர் பாய்ச்ச ஆள் கூலி | 11,250 |

| | | |
|---|---|---|
| 10 | பயிர் பாதுகாப்பு மற்றும் நோய் மேலாண்மை செலவு | 8,000 |
| 11 | 6 ஆவது மாதம் மீண்டும் 5000 நெற்றுக்கள் வாங்கி நாற்றுகளை உருவாக்கும் செலவு (வ. எண் 2 , 3, 4, 6 (ரூ.16,500), 7, 8, 9, 10) | 1,81,250 |
| | **மொத்த செலவு** | 4,00,000 |

| | | |
|---|---|---|
| 12 | மொத்த உற்பத்தி (13 மாதம் முதல் 18 மாதம் வரை) | 9000 தென்னங்கன்றுகள் (5% mortality போக) |
| 13 | ஒரு தென்னங்கன்றுக்கு ரூ. 65/– வீதம், 9000 தென்னங்கன்றுகள் விற்பனை மூலம் மொத்த வருமானம் | ரூ. 5,85,000/– |
| 14 | மொத்த உற்பத்தி செலவு | ரூ. 4,00,000/– |
| | **மொத்த இலாபம் (ஒரு ஆண்டிற்கு)** | ரூ. 1,85,000/– |

**பயிற்சி**

ஒவ்வொரு தென்னை நாற்று உற்பத்தி குழுவில் உள்ள உறுப்பினார்களுக்கு அக்குழுவில் ஏற்கனவே தென்னை நாற்றங்கால் உற்பத்தி பற்றிய பயிற்சி எடுத்துள்ள மகளிர் விவசாயிகளும் மற்றும் மாவட்ட (பண்ணை) வளப்பயிற்றுநரும் பயிற்சி வழங்க வேண்டும்.

**கடன் திருப்பம் மற்றும் சந்தைப் படுத்துதல்**

- உற்பத்தி செய்த தென்னங்கன்றுகள் 13ஆவது மாதம் தான் விற்பனைக்கு வரும் எனவே தென்னை நாற்று உற்பத்தி குழுவிக்கு விடுவிக்கப்பட்ட சுழல் நிதியை 14 ஆம் மாதம் முதல் 6% வட்டியுடன் மாதா மாதம் குழுவின் வங்கிக் கணக்கிற்கு திருப்பிச் செலுத்த வேண்டும்.
- ஒவ்வொரு மாதமும் தவறாமல் வசூல் செய்த கடன் தொகையையும், வட்டியினையும் கடன் வசூல் பதிவேட்டில் முறையாக பதிவு செய்து, உடனுக்குடன் தென்னை நாற்று உற்பத்தி குழுவின் வங்கிக் கணக்கில் செலுத்தப்பட வேண்டும்.
- உற்பத்தி செய்த தென்னங்கன்றுகளை மாவட்ட அளவில், தோட்டக்கலை மற்றும் வேளாண்மை துறை மூலமாகவோ, தென்னை வளர்ச்சி வாரியம் அல்லது மகளிர்த்திட்டத்தின் கீழ் இயங்கும் இதர சுய உதவி குழு மகளிர் விவசாயிகளுக்கோ விற்பனை செய்ய வேண்டும்.

**பராமரிக்கப்பட வேண்டிய பதிவேடுகள்**

1. தீர்மானப் பதிவேடு
2. வங்கி Passbook
3. கடன் வசூல் பதிவேடு
4. தென்னை நாற்று உற்பத்தி மற்றும் விற்பனை பதிவேடு

**கண்காணிப்பு**

- சமுதாய வள பயிற்றுனர் (பண்ணை) கடன் தவணைகளை முறையாக குழுவிலிருந்து பெற்று, குழுவின் வங்கிக் கணக்கில் வரவு வைப்பதை உறுதி செய்ய வேண்டும்.
- மாவட்ட வள பயிற்றுனர் (பண்ணை) தென்னை நாற்றுப் பண்ணையை மாதம் ஒரு முறை நேரில் சென்று பார்வையிட்டு தேவையான தொழில்நுட்ப ஆலோசனைகளை தோட்டக்கலைத்துறை அலுவலர்களின் ஒருங்கிணைப்புடன் வழங்க வேண்டும் .
- உதவி திட்ட அலுவலர் (வாழ்வாதாரம்), மாவட்ட வள பயிற்றுநர் (பண்ணை) வட்டார மேலாளர் இக்குழுவின் மாதந்திர கூட்டத்தில் கலந்து கொண்டு தென்னை நாற்று உற்பத்தி குழுவின் செயல்பாடுகளை ஆய்வு செய்ய வேண்டும்.
- திட்ட இயக்குனர், மகளிர் திட்டம் 3 மாதங்களுக்கு ஒரு முறை தென்னை நாற்றுப் பண்ணையை நேரில் சென்று ஆய்வு செய்ய வேண்டும்

**2024–25 ஆம் ஆண்டு தென்னை நாற்றுப்பண்ணைகள் அமைப்பதற்கான மாவட்டம் வாரியான இலக்கு**

| வஎண் . | மாவட்டங்கள் | தென்னை நாற்றுப்பண்ணைக்கான இலக்கு |
|---|---|---|
| 1 | செங்கல்பட்டு | 2 |
| 2 | கோயம்புத்தூர் | 2 |
| 3 | கடலூர் | 2 |
| 4 | தருமபுரி | 2 |
| 5 | திண்டுக்கல் | 2 |
| 6 | ஈரோடு | 2 |
| 7 | கள்ளக்குறிச்சி | 1 |
| 8 | கன்னியாகுமரி | 2 |
| 9 | கரூர் | 1 |
| 10 | கிருஷ்ணகிரி | 2 |
| 11 | மதுரை | 2 |
| 12 | மயிலாடுதுறை | 1 |
| 13 | நாகப்பட்டினம் | 1 |
| 14 | நாமக்கல் | 2 |
| 15 | புதுக்கோட்டை | 2 |
| 16 | ராமநாதபுரம் | 2 |

| | | |
|---|---|---|
| 17 | சேலம் | 2 |
| 18 | சிவகங்கை | 2 |
| 19 | தென்காசி | 2 |
| 20 | தஞ்சாவூர் | 1 |
| 21 | தேனி | 2 |
| 22 | திருவாரூர் | 1 |
| 23 | தூத்துக்குடி | 2 |
| 24 | திருநெல்வேலி | 2 |
| 25 | திருப்பத்தூர் | 2 |
| 26 | திருப்பூர் | 1 |
| 27 | திருவள்ளூர் | 2 |
| 28 | திருவண்ணாமலை | 2 |
| 29 | திருச்சி | 2 |
| 30 | வேலூர் | 2 |
| 31 | விழுப்புரம் | 2 |
| 32 | விருதுநகர் | 1 |
| 33 | அரியலூர் | 1 |
| 34 | இராணிபேட்டை | 1 |
| 35 | காஞ்சிபுரம் | 1 |
| 36 | பெரம்பலூர் | 1 |
| மொத்தம் | | 60 |

ஒம்......
நிர்வாக இயக்குனர் (கூ. பொ)

//உண்மை நகல்//

1/7/24

கூடுதல் இயக்குநர் (வா)/ (பொ)